**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP. No. 73/2020**

ம.சா.1 தேதி.20.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. ராஜ்குமார் | த/பெ, | ராமலிங்கம் |
| வயது | 39 | தொழில் | பல் மருத்துவம், அரசு பொது மருத்துவமனை, மயிலாடுதுறை |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் பல் சிகிச்சை பிரிவில் பொது மருத்துவராக பணியாற்றி வருகிறேன், கடந்த 17.11.2022 அன்று மனுதாரர் சரண் என்பவர் ஊனச்சான்று பெறுவதற்காக மருத்துவக்குழுவிடம் பரிசோதனைக்காக ஆஜரானார். நான் அந்த மருத்துவக்குழுவில் 2 வது உறுப்பினராக இருந்தேன். சரண் என்பவருக்கு ஊனச்சான்று Ortho மருத்துவர் மகேஷ் என்பவரால் வழங்கப்பட்டது. அவர் தற்போது உயிருடன் இல்லை. நானும் இந்த மருத்துவக்குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதால் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை பெற்று அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மனுதாரருக்கு உள்ள குறைபாடானது நிரந்தர குறைபாடாகவும் இருக்கலாம் என்றால் இருக்கலாம். அவருடைய செயல்பாட்டுத்திறன் 40 சதவீதம் என்று மருத்துவக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது. 60 சதவீதம் இயலாமைக்காக ஊனம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மனுதாரருக்கு இடது கை மூட்டு சிதலமடைந்து உள்ளது. சிதலமடைந்த மூட்டை முழுவதுமாக மீட்டு உறுவாக்கம் செய்ய இயலாது என்றால் 100 சதவீதம் சரிசெய்ய முடியாது. அதற்கான சிகிச்சை அளித்தால் ஓரளவிற்கு சரிசெய்யலாம். இந்த ஊனச்சான்றிதழில் Re assessment என்ற இடத்தில் எந்த குறிப்பும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நிரந்தர ஊனமாக இருந்தால் Re assessment பற்றி குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை என்றால் நிரந்தர ஊனமாக இருக்கும் பட்சத்தில் குறிப்பு எதுவும் எழுதாமல் இருக்கலாம் என்றால் சரிதான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் எலும்பு சிகிச்சை நிபுணர் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் பல் மற்றும் முகம் சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர் என்று சொன்னால் சரிதான். நான் இந்த மருத்துவக்குழுவில் ஒரு உறுப்பினராகவும். என்னை அன்றி மருத்துவக்குழுவில் Chairman உள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த ஊனச்சான்றிதழ் மருத்துவத்துறை JD துறையில் நடந்த முகாமில் நடத்தப்பட்டதாகும். நான் இந்த மனுதாரரை நேரடியாக பரிசோதனை செய்யவில்லை என்றால் எலும்பு சிகிச்சை மருத்துவர் தான் நேரடியாக பரிசோதனை செய்தார் என்றால் சரிதான். நான் இந்த ஊனச்சான்றிதழில் எலும்பு முறிவு மருத்துவரின் கையொப்பம் இருப்பதை பார்த்து நான் கையொப்பம் செய்தேனா அல்லது எவ்வாறு ஊனச்சதவீதம் கணக்கீடு செய்யப்படுள்ளது என்பதை பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் நான் சிகிச்சைக்கு வரும் நபரின் அடையாளம் அறிந்து அவரைத்தான் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா என அறிந்து எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர் கணக்கீடு செய்து ஊன சதவீதம் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்து நானும் அதில் கையொப்பம் செய்தேன்.

என்னிடம் காட்டப்படும் நீமசாஆ1 ல் Annexure A & B இணைக்கப்பட வில்லை என்று சொன்னால் சரிதான். மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் மாண்புமிகு உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின் படியும் மற்றும் படியும் ஊனச்சதவீதம் கணக்கீட்டிற்கான அரசாணையின் படியும் காயம் அடைந்தவரை பரிசோதனை செய்து அதற்கான Formula வின் படி கணக்கீடு செய்ததான் ஊனச்சதவீதம் கணக்கிட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கின் ஊனச்சான்றிதழில் அதற்கான கணக்கீடு குறிப்பிடப்படவில்லை என்றாலும் Annexure A, B இனைக்கப்படவில்லை என்றால் சரிதான். இதுபோன்ற ஊனச்சான்றிதழ் வழங்கப்படும்போது மேற்கண்ட அனைத்து விபரங்களையும் சரிபார்த்து அதனை உறுதிசெய்து மருத்துவக்குழுவின் சேர்மன் கையொப்பம் இடவேண்டும் என்றால் சரிதான்.

நிரந்தர ஊனம் என்பது அந்தந்த உறுப்புகளை பொருத்து 100 சதவீதம் செயலிழந்து போவதை தான் குறிக்கிறது என்றால் சரிதான். பொதுவாக 40 சதவீதம் செயல்பாட்டுத்திறன் உள்ளதாக குறிப்பிடும் பட்சத்தில் அது நிரந்தர ஊனம் என குறிப்பிட இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் மேலே சொன்ன கருத்துக்கு முன்னுக்கு முறனாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த

ஊனச்சான்றிதழைப் பொருத்து குறிப்பாக வேறு ஒரு எலும்பு முறிவு சிறப்பு மருத்துவரால் தான் சாட்சியம் அளிக்க இயலும் என்று சொன்னால் சரிதான். இந்த ஊனச்சான்றினைப் பொருத்து நேரடியாக மனுதாரரை பரிசோதனை செய்யாமல் எந்தவொரு ஆழமான கருத்தையும் என்னால் கருத்து தெரிவிக்க இயலாது என்று சொன்னால் சரிதான். அதனால் இந்த ஊனம் தற்காலிகமானதா நிரந்தரமானதா என்று இந்த வழக்கை பொருத்து என்னால் கூற இயலாது என்று சொன்னால் சரிதான்.

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:– 2ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை முழுவதும் ஏற்றுக்கொள்கிறார்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.